
உ
சிவமயம்


# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் வரலாறும் அருள்விருந்தும்



வெளியிடுவோர்:
மில்க்வைற் தொழிலதிபர்
யாழ்ப்பாணம்
1986

உ

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் வரலாறும் அருள்விருந்தும்



# விபுலானந்த அடிகள் நினைவு வெளியீடு

★

ஆக்கம்:

**க. சி. குலரத்தினம்**

★


வெளியிடுவோர்:

சிவதர்ம வள்ளல் — சமாதான நீதவான்

**க. கனகராசா அவர்கள்**

(தொழிலதிபர்)

திருஆலவாய்,

யாழ்ப்பாணம்.

19-7-1986

உ

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## தோற்றமும் பூர்வாச்சிரமமும்

தென்பாரதத்திலே கொங்கு மண்டலத்திலே கோவை மாவட்டத்திலே பொள்ளாச்சி நகரினணித்தாயமைந்த செங்குட்டை பாளையம் என்னும் ஊரிலே பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பெருநிலக்கிழார்கள் மரபிலே வாழ்ந்தவர் பெரியண்ணன் கௌண்டர். அவரின் முன்னோர் சித்தவைத்தியத் துறையிலும் சோதிடக் கலையிலும் சிறந்து விளங்கினர். அவர்களின் வழியில் வந்த பெரியண்ணனும் அத்துறைகளிற் பாண்டித்தியம் பெற்ற பெரியவராயிருந்தார்.

அவர் நஞ்சம்மையார் என்னும் மங்கை நல்லாளை மணந்து, மைந்தர் மூவரையும் பெண்கள் மூவரையும் பெற்ற பின், 11-3-1898ஆம் நாளில் பெற்ற ஆண் குழந்தைக்குச் சின்னு எனப்பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். சின்னு இளமையிலேயே படிப்பாற்றலும் விவேகமும் உள்ளவராய் வகுப்பில் முதற்பிள்ளையாய்ப் படித்து வந்தார். நாடகங்கள் எழுதுவதிலும் நடிப்பதிலும் அவருக்குத் திறமை கைகூடியிருந்தது. அவரின் படிப்பாற்றலைக் கவனித்த பெற்றோரும் பெரியவர்களும் அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி, கௌரவம் மிகுந்த ஐ. சி. எஸ் உத்தியோகத்தராக்குவதற்கு விரும்பி ஆவனசெய்து வந்தனர்.

பிறெசிடென்சி கொலிஜ் என வழங்கும் சென்னை மாநிலக் கல்லூரியிற் படித்தபோது, விக்ரோறியா விடுதியில் உறைந்த காலத்தில் அவருடன் அவிநாசிலிங்கஞ் செட்டியார், கிருஷ்ணன், நம்பூதிரி முதலானோரும் தங்கி வாழ்ந்து படித்து வந்தனர். ஒருநாள் சுவாமி விவேகானந்தரின் புத்தகம் ஒன்றைப் படித்த சின்னு, தான் இங்கிலாந்துக்குப் போகும் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். அவரின் மனமாற்

றத்தை உறுதிப்படுத்துவதற்கு, அவருக்கு வாய்ப்பாக ஒரு சந்தர்ப்பம் உண்டானது.

இராமகிருஷ்ண மடத்துத்துறவியர்களும், பகவானின் சீடர்களுமான பிரமானந்தர், சிவானந்தர் என்னும் பெரியார்கள் இருவரை நண்பர்களுடன் சென்று கண்டு, திசைமாறிய பின்னு துறவுபூண்டு, விவேகானந்தரைப்போலத் தாமும் தொண்டு செய்தல் வேண்டும் எனப்பெரிதும் விரும்பினர். மக்களுக்குச் சேவை செய்யும் பணியே மகத்தான தொண்டு எனக்கருதினர்.

## துறவும் தொண்டும்

கற்கத்தா சென்று சமஸ்கிருதம் படிக்கப்போவதாகப் பெற்றோருக்கு எழுதிவிட்டு, அங்கு சென்றவர் பேளூர்மடத்திற்சேர்ந்து, 1923ஆம் ஆண்டில் பிரமச்சரிய தீட்சைபெற்று **ஸ்ரீ திரையம்பகச்சைதன்யர்** என்னும் பெயர்புனைந்து தொண்டரானர்.

இராமகிருஷ்ண மடத்திற்குத் தொண்டராய திரையம்பகர் மடசம்பிரதாயங்களையும் சேவையையும் நன்ருகச் செய் முறைகளில் பழகிக்கொண்டார். மடத்தையும் சூழலையும் தூய்மையாக வைத்திருப்பதில் அவர் சிறப்பான பயிற்சியைப் பழகிக்கொண்டார். கற்கத்தாவிலிருந்த காலத்திலேயே அங்கிருந்து பல திருத்தலங்களுக்கும் சென்று யாத்திரை முறைகளையும் பழகிக் கொண்டார், தனித்திருந்து தவஞ் செய்யவும் பழகிய இவர், இராமகிருஷ்ண மடமொன்றைப் பரிபாலிக்கும் பொறுப்பையும் பெற்றிருந்தார்.

உதகமண்டலத்துக்கு இராமகிருஷ்ணமடம் உருவாக்குவதற்குப் பெரியண்ணன் கௌண்டர் பெருமளவு பொருள் கொடுத்துதவினர். திரையம்பகச்சைதன்யர் தாம் இளமையில் மனதைப் பறிகொடுத்த சிவானந்தசுவாமியாரிடம் 1926ஆம் ஆண்டில் சன்னியாச தீட்சைபெற்றுச் சித்பவானந்தர் என்னும் சன்னியாசநாமம் பெற்ருர். இவரின் சன்னியாசப்

பிரவேச கிரியைகள் நடைபெற்ற வேளையில், எவ்விதநோயு மின்றி பெரியண்ணன் கௌண்டர் காலமாயினார் என்பர்.

சன்னியாசியாகியதும் 1926 முதல் 1940 வரை இவர் உதகமண்டலத்திலே உறுதியானபணிகள் செய்து பெருமதிப் புப்பெற்றார். சகோதர சன்னியாசிகள் இவரின் சேவைத்திறனை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். இவர் 1940ஆம் ஆண்டில் திருப்பராய்த்துறையில் தங்கியிருந்தபோது, அந்தச்சூழலில் மடமமைத்துப் பிள்ளைகளை மனிதராக்குதல் வேண்டும் எனச் சிந்தித்துச் செயலில் இறங்கினார்.

சிவபெருமான் கொண்டருளிய அருள் மூர்த்தங்களுள் பிச்சாடனர் வடிவமும் ஒன்று. அது தாருகாவனத்து முனி வர்களின் அகந்தையைப் போக்கி, அவர்களை ஆட்கொண் டருளுவதற்கேயாம். பிச்சாடன வடிவங்கொண்டருளிய திருத் தலம் திருப்பராய்த்துறையாகும். இது காவிரிநதி வள மாகப்பாயும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இத்தலத்தில் பராய் என்னும் மரங்கள் அடர்ந்து வளர்ந்தமையால் இது திருப்பராய்த்துறை என வழங்குவதாயிற்று. பராய் மரத்தை வடமொழியில் தாருக என்பதால் இது தாருகாவனமாகும். இங்கெழுந்தருளிய இறைவன் சுயம்பு மூர்த்தியாய்ப் பராய் நாதர் எனத் திருநாமம் பெற்றவர். திருப்பராய்த்துறை மேவிய செல்வரே எனத் தேவாரம் போற்ற எழுந்தருளி யுள்ள இறைவனின் திருவருள் பெருக்கமுள்ளது இவ்வூர்.

இத்தகைய புண்ணியமண்ணில் தம்முடைய நற்பணி அநுகூலமடையும் எனக் கருதிய சுவாமிகள் அங்கே தம் ஆச்சிரமத்தை அமைப்பாராயினார்.

இவர் 1942ஆம் ஆண்டில் ஆரம்பித்த திருப்பராய்த் துறைத் தபோவனத்தின் ஆரம்பவிழாவில் ஈழத்துப் பெரிய வரான விபுலானந்தஅடிகளார் ஆசிவழங்கி உரையாற்றினார் கள் என்பர். அதன்பின் சித்பவானந்தசுவாமிகள் ஸ்ரீ விவே கானந்த வித்யாவனப்பள்ளி என்னும் கல்வி நிலையத்தையும் தாபித்துப் பிள்ளைகளை மனிதராக்கி, எதிர்காலச் சமுதா

யத்தை நல்லநிலையில் நிலவுவதற்கு வழிவகுத்துப் பணி புரிந்தார்.

பழைய காலத்துக் குருகுலக்கல்வி முறையையும் இக்காலத்துக் கல்வி முறையையும் சேர்த்து நல்ல திட்டத்தைத் தயாரித்துப் படிக்க வைத்தபோது, வாழ்க்கைப் பயிற்சியை இன்றியமையாததாகக் கொண்டார். ஒழுக்கம், தூய்மை, எளியவாழ்வு, சேவைமனப்பான்மை என்பனவாகிய நல்லறங்கள் பிள்ளைகளிடம் படிந்தன.

பின்னர் குருகுலமுறையில் உயர்நிலைக்கழகமும் கல்லூரியும் திருவேடகம் என்னும் திருத்தலத்தில் அமைத்து நடத்தியமை போலப் பெண்களுக்குச் சேலத்தில் சாரதா சமிதி அமைத்தார்கள். இதன் கிளைகள் திருநெல்வேலி, மதுரை, மன்னார்க்குடி ஆகிய இடங்களில் அமைவதற்கு வழிவகுத்தார்கள்.

சிறியவர்களை மனிதராக்க முயன்றதோடு பெரியவர்களை உய்தியடையச் செய்வதற்கு ஆங்காங்கே அந்தர்யோகம் அநுட்டிக்கும் பழக்கத்தை நடத்திவந்தார்கள். உலகவிடயங்களினின்றும் மனத்தைத் திருத்தி இறைவனிடம் படியச்செய்வதற்கு அந்தர்யோகமும் நல்லவர் பெரியவர்களின் திருக்கூட்டமும் பேருதவி புரிந்தன.

இங்ஙனம் வாழ்வை மலர்த்திய வழிகளைக் காண்பித்த பெரியவர் எல்லோரும் வாசித்தறிவதற்கு இலகுவான இனிய நடையில் ஏராளமான நூல்களை எழுதிப் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் வெளியிட்டுப் பரப்பியுள்ளார்கள். இவர் தயாரித்த பென்னம்பெரிய உரை நூல்கள் திருவாசகமும் பகவத்கீதையுமாகும். இன்னும் சிவன், சக்தி, விநாயகர், முருகன், திருமால், பிரமன், இராவணன் முதலாய பல்வேறு தலைப்புக்களிலும் நூற்றுக்கணக்கான சிறுநூல்கள் எழுதியுள்ளார்கள். இன்னும் யோகமார்க்கத்தை இலகுவாக விளக்கியதோடு, சந்தேகம் தெளிவிக்கும் வினாவிடைகளையும் தயாரித்து வெளியிட்டுள்ளார்கள். இவர் எழுதிய தினசரி

தியானம் என்னும் நூல் நாள்தோறும் புதிய சிந்தனை விருந்தளிக்கிறது. பல்லாயிரவர் பயன்பெற்று உய்தியடைகிறார்கள். மாதாந்தம் இவர் தமது ஆச்சிரமத்திலிருந்து வெளியிட்ட சஞ்சிகை **தர்மசக்கரம்** என்பதாகும். இதை இவர் முப்பத்துநான்கு சக்கரங்களில், ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு ஆரங்களாக அமைத்துள்ளார்கள். இவர் உருட்டிய தர்மசக்கரத்தில் வந்த உபதேச வாக்கியங்களையே மில்க்வைற் செய்தியில் **அருள்விருந்து** என்னும் தலைப்பில் அவ்வப்போது வெளியிட்டு வந்தோம்.

## அநுபூதியும் சமாதிப் பேறும்

இவ்வாருகப் பல்லாயிரக்கணக்கான மக்களை ஆன்மீக வாழ்வில் ஈடுபடச்செய்து, "ஆனந்தமாக இருங்கள், சிறப்பாகச் செய்யுங்கள்'' என்றெல்லாம் ஆசீர்வதித்து வந்தவர் தாமே ஆனந்தமாக அப்பரைப்போல நீண்டகாலம் வாழ்ந்து தமது எண்பத்தெட்டாம் அகவையில் **16-11-1985**ஆம் நாளில் அனந்த சமாதியடைந்தார்கள்.

---

சுவாமி அவர்கள் மில்க்வைற் தொழிலதிபரையும் நண்பர்களையும் 1975ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதி நாள்களில் தமது திருப்பராய்த்துறை ஆச்சிரமத்தில் அன்போடு வரவேற்று உபசரித்து உபகரிப்புச் செய்த சம்பவத்தைப் பெரும் பாக்கியம் எனக்கருதுகிறோம்.

உ

சிவமயம்

# அருள்விருந்து

1. அவாவை அறுத்தவன் அமைதியை அடைகிறான்.
2. நாம் தேடும் இன்பம் எம்மிடமே உண்டு.
3. அல்லல்களைப் போக்க ஆத்மசக்தி உதவுகிறது.
4. சிந்தையும் செயலும் நல்லனவாக வேண்டும்.
5. உள்ளத்தில் உலக ஆசை புகுதலாகாது.
6. ஆசையறும்வரை பிறப்புக்கள் சம்பவிக்கும்.
7. மனிதனை உருவாக்குவது அவன் எண்ணம்.
8. கொடுப்பவனுக்கு என்றும் மேன்மை உண்டு.
9. நல்லவையும் அழகியவையும் கடவுள் தந்தவை.
10. சுகமுள்ள இடத்தில் துக்கமும் மறைந்துள்ளது.
11. நல்லவன் நலன்கள் நாடெங்கும் பரவும்.
12. பற்றற்ற பயமற்ற சினமற்ற மனமே சீரியது.
13. முகமலர்ச்சி அறிவை நன்றாக வளர்க்கிறது.
14. வெறுப்பு வேற்றுமையை வளர்க்கிறது.
15. கோபமற்ற மனம் மிகவும் வலியது.
16. அச்சம் உள்ளவனுக்கு மரணபயம் அதிகம்.
17. அறநெறியில் சார்ந்தவன் பரமபதமடைவான்.
18. ஆசைகளை அகற்றியவன் தூயவனாகிறான்.
19. தெய்வநம்பிக்கையால் உறுதி, நேர்மை வளருகின்றன.
20. தொண்டன் உள்ளத்தில் அன்பு மிகுந்திருக்கும்.
21. மனத்துக்கு உகந்த உணவு கல்வியேயாம்.
22. மனிதமேன்மையை வெளிப்படுத்துவது பிரார்த்தனை.
23. சேவை செய்யச் செய்ய ஆற்றல் அதிகரிக்கும்.
24. உலகப்பற்றை இறைவன் திருநாமம் அகற்றுகிறது.
25. பேராசை மனிதனைப் பாழ்படுத்துகிறது.
26. நமக்குத் துன்பங்களை உண்டாக்குபவர் நாமே.
27. நடுவுநிலைமை எய்துவது பெருமை.
28. செய்யும் செயலில் சிந்தை செலுத்துபவன் யோகி.

29. தன்னை அறிந்தவன் உலகத்தையும் அறிவான்.
30. கடவுளின் கிருபை பணிவுடையவனை நாடுகிறது.
31. சீரிய புலடனக்கமே மேலான நாகரிகம்.
32. கடமையைக் கடவுள் வழிபாடாகக் கருதுதல் அறம்
33. சன்மார்க்கம் எல்லோருக்கும் உறுதி தருவது.
34. அரிசி அன்னமாவதுபோல் மனிதன் சித்தனுகிறுன்.
35. பேசிக்கொண்டிருந்தால் பெருவாழ்வு கிட்டாது.
36. சீரிய சிந்தனையால் மௌனம் உண்டாகிறது.
37. கபடமுள்ளவனுக்குக் காரியம் நிறைவேருது.
38. அறத்துக்கு முரண்பட்டவை அழிந்து போகும்.
39 அடக்கமுள்ள சான்ரேரைத் துயரம் ஒன்றுஞ் செய்யாது.
40. தெய்வத்துக்கு அஞ்சுபவன் வேறெதற்கும் அஞ்சான்.
41. தூயஉள்ளத்தில் வெறுப்புத்தன்மை வேர் விடுவதில்லை.
42. துன்பங்கள் வருவதால் மனிதன் சீர்திருத்தமடைகிருன்.
43. எண்ணத்துக்குத் தக்கதாக வாழ்வு அமைகிறது.
44. நான் என்னும் அகந்தையை விடுவதே பெரிய பேறு.
45. பொருமை மனிதமேன்மைகளைத் தேய்த்து விடுகிறது
46. இயற்கையை மீறி எவரும் நடக்கமுடியாது.
47. மனப்பண்பாடே வாழ்க்கையின் முக்கிய நோக்கம்.
48. நெறியான வாழ்வில் நேர்மை அனைத்தும் உண்டு.
49. பற்றற்றவனை வினைத்தளைகள் ஒன்றும் செய்வதில்லை.
50. தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்.
51. தெய்விக உணர்ச்சியால் மேலான வாழ்வு கிடைக்கிறது.
52. கடவுட் சிந்தனையிருந்தால் பாபம் நுழையாது.
53. பற்றற்றநிலையில் பேரின்பம் ஆரம்பிக்கின்றது.
54. ஒருவனின் ஆசைக்குத்தக்க பந்தமும் இருக்கும்.
55. பிறர்க்கு இன்பமுண்டாக்க நமக்கு இன்பமுண்டாகிறது.
56. பிரதிபலனை எதிர்பார்க்கும் செயல் துன்பத்தைத்தரும்.
57. தன்னை அடக்கியவன் பிறரையும் அடக்கியாள்வான்.

58. தாயின் அன்பு மூலமாகக் கடவுளின் அன்பை அறியலாம்.
59. வறுமை என்னும் நோய் வாழ்வைப் பண்படுத்துகிறது.
60. சுயநலம் கொண்டவர்களே பிற்போக்குவாதிகள்.
61. மனம் அடங்காதவனுக்கு இன்பம் இல்லை.
62. இந்திரியங்களுக்கு வசப்படுகிறவன் கீழோனவன்.
63. மனத்தை ஒழுங்குபடுத்துவதால் நல்லவனுகலாம்.
64. தூய்மையில் நிலைத்திருப்பதே வாழ்வின் குறிக்கோள்.
65. சுயநலத்தினின்றும் விலகியவன் நரகத்தையறியான்.
66. கடவுள் தம்மைக் காட்டிக்கொண்டே இருக்கிறார்.
67. தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.
68. சுயநலத்தை விட்டவன் கடவுளை நேசிக்கிறான்.
69. ஆசை ஒழிந்த இடத்தில் நரகவேதனை இல்லை.
70. அன்பும், அநுதாபமும் மனிதனின் சாதனைகளுள் சிறந்தவை.
71. துக்கத்தைச் சகிப்பவன் அதனை வென்றவனுகிறான்.
72. கோழை சாபம் என்பதை வீரன் ஆசீர்வாதம் என்கிறான்.
73. கடவுளை நேசிப்பவன் மனிதனை வெறுக்கமாட்டான்.
74. விழுப்பம் நிறைந்த வேட்கை வீண் போவதில்லை.
75. எவரிடத்தும் பற்றுவைக்காமல் அன்பு கொள்ளல் நலம்.
76. உயிரை உறுதிப்படுத்துவது அறிவின் திறன்.
77. மாறுபடும் உலகில் என்றும் மாறுது இருப்பவர் கடவுள்.
78. முகஸ்துதி சொல்பவனும் கேட்பவனும் கெட்டவர்கள்
79. மரணத்தை வெல்வதாவது அதனை மகிழ்வுடன் ஏற்றலேயாம்.
80. உடல் பழுதுபட்டாலும் உள்ளம் தெளிவாதல் வேண்டும்.
81. பெருநெறி பிடித்தவனை நோய்கள் தீண்டுவதில்லை.
82. புல்லிய எண்ணங்கள் மனக்குழப்பம் தருகின்றன.
83. சீலங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது பொறுமை.
84. உளதும் இலதும் பொருளின் இருவித தோற்றங்கள்.

85. நாம் பாடுபட்டுத் தேடியதே நமது பொருளாகும்.
86. இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்.
87. மனத்தூய்மை பெற்றவர் கடவுளைக் காணவல்லவர்
88. மேலானது ஒன்றை யாரும் என்றும் அழிக்கமுடியாது.
89. மக்களுள் ஒற்றுமையை உண்டாக்குவது நன்நெறி.
90. தியானத்தால் கடவுளைக்காணும் ஞானக்கண் உண்டாகிறது.
91. ஆசையை வென்றவனே நிறைந்த செல்வம் உடையவன்.
92. முயற்சிக்கேற்றவாறு மனிதன் முன்னேற்றமடைகிறான்.
93. கீழ்ப்படியத் தெரிந்தவனே ஆளவல்லவனாகிறான்.
94. வினைப்பயன் வாழ்வைப் பின்பற்றி வருகிறது.
95. தாய்மொழியை இழப்பவர் தம்மையே இழப்பார்கள்.
96. நல்ல செயலுக்கு இயற்கை இடம் தருகிறது.
97. சான்றோன் எல்லார்க்கும் நடுநிலையில் இருக்கிறான்.
98. வாழ்க்கைப் பாதைக்கு நல்லறிவே கைவிளக்கு.
99 தூயஅன்புள்ள இடத்தில் அச்சம் இல்லை.
100. அனைத்தையும் தன்னகத்தில் அணைத்துக் கொள்வது அன்பு.
101. மனவடக்கத்துக்கு அடையாளம் நாவடக்கம்.
102. உண்மை பேசுதல் யாகங்களிலும் மேலானது.
103. பதவிமோகம் இல்லாதவனை உலகம் அடிபணிகிறது.
104. அச்சம் உள்ள இடத்தில் குறைபாடு உண்டு.
105. அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான்.
106. தந்தையை இகழ்பவன் தன்னையே இகழ்பவனாவன்.
107. மௌனமாயிருத்தல் தெய்வத்தின் பாஷை.
108. தூயஅன்பு ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை.
109. ஆசை உள்ளளவும் அல்லல்களும் உண்டு.
110. அன்பு ஓங்கும்போது அச்சம் அகலுகிறது.
111. ஒழுக்கத்தின் அழகு வாழ்வு முழுவதிலும் இருக்கிறது.
112. துக்கம் தீயசெயலிலிருந்து தோன்றுகிறது.
113. பொருளாதார ஆசை மனத்தை அழுக்குப்படுத்துகிறது.
114. மனத்தை மாற்றியமைக்க வல்லது எண்ணம்.

115. நம்பிக்கை உள்ளவனுக்கு ஞானம் விரைவில் ஓங்கு கிறது.
116. மனச்சாட்சியைச் சார்ந்திருத்தல் மிகமேலானது.
117. இறைவனின் ஆணையைக் கேட்பவன் உலகை விலகிய வன்.
118. மனத்தை அடக்கப் பழகுபவன் சான்றோனுகிறன்.
119. இனிமை என்பது இறைவனின் அறிகுறி.
120. உறுதியான நம்பிக்கை உயிரை ஓம்புகிறது.
121. மெய்யறிவு மேலிடப் பேரின்பம் உண்டாகிறது.
122. பேரறிவுள்ளவன் பொறையுடையவனுகிறன்.
123. அகமகிழ்ச்சி உள்ளத்துக்கு இளமை தருகிறது.
124. பிரார்த்தனையில் விரும்பவேண்டியவை ஞானம், பக்தி.
125. உழைப்பினுலன்றி இன்பத்தைப் பெறமுடியாது.
126. பக்தி என்னும் விளக்குக்கு எண்ணெய் பிரார்த்தனை.
127. ஒருவனின் பேச்சிலிருந்து பண்பாட்டை அறியலாம்.
128. கடவுளை அறிந்தவன் அனைவருக்கும் அடியவனுகிறன்.
129. மனத்திருப்தி உள்ளவனுக்கு இடர்கள் கிடையா.
130. வேற்றுமை உணர்வு பயத்தை உண்டுபண்ணுகிறது.
131. துயரத்தை ஏற்பவனுக்கு அதனுல் வருத்தம் இல்லை.
132. துன்பத்தின் மூலம் வாழ்க்கைத் தத்துவம் வெளியா கிறது.
133. இறைவனின் பூரண ஆற்றல் நமக்குச் சொந்தம்
134. சிந்தையை அடக்கினுல் செயல்கள் சிறக்கும்.
135. மோட்சம் பெறுவதற்கு முதற்படி மனத்தூய்மை.
136. எல்லோரும் இறைவனுடைய பல்வேறு தோற்றங்கள்.
137. நற்செயல்களால் வினையின் வேகத்தைத் தணிக்கலாம்.
138. எதிலும் அழகைத் தோற்றுவிப்பதே கலை.
139. அமைதியாக இருந்தால் மெய்ஞ்ஞானம் உண்டாகும்.
140. மனவடக்கம் இருந்தால் இன்பநிலை நிலைக்கும்.
141. மனம் ஒருமைப்படுவதால் அறிவு ஆற்றல் சிறக்கும்.
142. புலன்வழி போனவன் உயர்ந்த வாழ்வுக்கு உதவான்.
143. கடவுள் நம்பிக்கைக்கு உயிர்நாடி பிரார்த்தனை.
144. சமயக்கோட்பாடுகளைச் சாதிப்பவன் சான்றோன்.
145. அதிகம் பேசுபவனுக்குச் சிந்தனை ஆற்றல் இல்லை.

146. நெடுங்காலம், குறுகியகாலம் மனநிலையைப் பொறுத்தவை.

147. வேலையில் விருப்பம் இருந்தால் நேரம் போவது தெரியாது.

148. பேசாதிருப்பதால் மனபரிபாகம் உண்டாகிறது.

149. தத்துவ தரிசனம் என்பது வாழ்க்கையைப்பற்றிய கலை.

150. ஊனக்கண்ணுக்கு உலகம் ஞானக்கண்ணுக்குக் கடவுள்.

151. இறைவனிடமிருந்து புறம்போவது பாவம்.

152. மௌனநிலையில் தூய எண்ணங்கள் எழும்.

153. நல்லவன் தன்திறமையை விளம்பரம் செய்வதில்லை.

154. மனித மேன்மைக்கு மூலகாரணம் தன்னடக்கம்.

155. நிறையன்பில் நிறையமைதி நிலவுகிறது.

156. நாவடக்கம் மனிதனை மேலோனுக்கிவிடுகிறது.

157. மனத்தைத் தூய்மைப்படுத்துவதே கல்வியின் பயன்.

158. காய்ச்சல்களில் கொடிய காய்ச்சல் கோபம்.

159. உண்மை ஒன்றே மனிதரை உய்விக்கவல்லது.

160. ஆக்கத்தின் வலக்கரம் உழைப்பு, இடக்கரம் சிக்கனம்.

161. நல்லதைச் செய்தல் தெய்வ வழிபாட்டிற்கு நிகர்.

162. தேடாமல், தவிர்க்காமல் வருவதை ஏற்றல் வேண்டும்.

163. மகிழ்வுடன் சுமக்கும் சுமை பாரமற்றதாகிவிடும்.

164. அபிப்பிராயம் கொடுப்பதைவிட கேட்பது நல்லது.

165. சத்தியம், இரக்கம், தவம், ஈகை தர்மத்தின் கால்கள்.

166. துன்பங்களைத் துடைக்க வல்லவை அருள்மொழிகள்.

167. தற்பெருமையால் பொறுமையும் கோபமும் வளரும்.

168. ஆத்திரக்காரன் ஒருபோதும் வெற்றியடையான்.

169. தனக்குப் பிடிக்காததைப் பிறர்க்கு வழங்கலாகாது

170. சாந்தியை அறியாத மனிதன் விலங்குக்குச் சமானம்.

171. சகல தீமைகளையும் அகற்றவல்ல அருமருந்து அன்பு.

172. தேகம் இருக்கும்வரை சுகதுக்கங்கள் இருக்கும்.

173. மனிதனின் தரத்தைச் சோதிப்பது கஷ்டகாலம்.

174. பொருள் நாட்டத்தால் பந்தமும் பயமும் வருகின்றது.

175. சுயநம்பிக்கையை ஒருபோதும் இழக்கலாகாது.

176. தூய்மையும் மௌனமும் சொல்லாற்றலை வளர்ப் பவை.
177. உள்ளத் தெளிவில் உயர்ந்த ஆனந்தம் மலரும்.
178. கட்டுப்பாடான வாழ்க்கை மேலான பயனைத்தருகிறது
179. கடவுளுக்கு நாம் படைப்பனவுள் மனமே சிறந்தது.
180. ஞானத்திலிருந்து ஆற்றலும் தியாகமும் அதிகரிக் கின்றன.
181. பிறர்க்குக் கொடுப்பதால் வாழ்வு மேன்மையுறுகிறது.
182. சக்திகளுள் மகாசக்தி வாய்ந்தது எண்ணம்.
183. திருவருள் சம்மதத்தின்படியே யாவும் நடைபெறும்.
184. கீர்த்தியை விரும்பாதவன் மக்களுள் மேலோனவன்.
185. கொடையாளியிடம் அடக்கமும் பணிவும் வேண்டும்.
186. அன்புக்கும் அறிவுக்குமிடையில் முரண்பாடு இல்லை.
187. தூயமனம் இறைவனுக்குரிய சிறந்த ஆலயம்.
188. எளிமையும் தூய்மையும் மனிதனை உயர்த்துகின்றன.
189. வெறுப்பவனும் சினப்பவனும் வீரனவதில்லை.
190. சன்மார்க்கம் மனவுறுதியை வளர்க்கிறது.
191. ஆசையற்ற இடத்தில் ஆனந்தம் மிளிர்கிறது.
192. மனித முன்னேற்றத்திற்குத் துன்பமே அதிகம் உதவு கிறது.
193. பொருளானந்தத்தைவிட அருளானந்தமே சிறந்தது.
194. நாம் செய்வனவற்றை இறைவன் பார்த்திருக்கிறார்.
195. உள்ளத்துக் குறைபாடுகளையே முதலில் நீக்கவேண்டும்.
196. உண்மையும் உள்ளத்து நேர்மையும் இணைபிரியா தவை
197. உடைமையும் வறுமையும் மனநிலையைப் பொறுத் தவை.
198. பணிகிறவன் நிச்சயமாக உயர்நிலையடைகிறான்.
199. ஞானம் உள்ளிருந்தே உதயமாகி வந்து வளர்கிறது.
200. எதையிட்டும் சத்தியத்தை தியாகம் செய்யலாகாது.

# தினசரி தியானம்

## தொண்டு

ஆருயிர்க்கெல்லாம் அன்புடன் தொண்டு புரியும் ஆர்வத்தை அண்ணலே, எனக்கு நல்குவீராக.

## ஆனந்தம்

இறைவா, தேவரீர் ஆனந்தம். அடியேன் சிந்தையினுள் தேவரீர் வீற்றிருக்கின்றீர் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்? ஆனந்தம் இன்றி இன்று யார் உயிர் வாழ முடியும்.

## அருள்தாகம்

அற்ப பொருளுக்காகத் தாகம் கொண்டுள்ள அடியேன் மனதில், அருள்தாகம் கொள்ளும்படி அண்ணலே, தேவரீர் அருள் புரிவீராக.

## மனம், மொழி, ஒற்றுமை

மனம் ஒன்று எண்ண, மொழியொன்று பேசும் புன்மையனுக்கு, எண்ணியாங்கு இயம்பும் திண்மையைத் தகையே தேவரீர் தந்தருள்வீராக.

## தாய்

உலகனைத்தையும் ஈன்றருளிய தாயே, என்னைத் தேவரீர் தாங்கிக்கொள்வீராக. அறியாமையினுல் கேடுகள் பல செய்யும் என்னைக் கருணையோடு காத்தருள்வீராக.

## குரு

அண்ணலே, தேவரீர் அருட்குருவாக வந்தருளி அடியேன் உள்ளமாகிய கல்லைப்பிசைந்து தெய்வக்கனியாக மாற்றி அமைக்க வல்லவன். அடியேன் உடல், பொருள், ஆவியெல்லாம் தேவரீருக்கே உரியனவாகுக.

## முத்தி

அடியேனுக்கு ஒவ்வாத உலகப் பெற்றிகளிலிருந்து அடியேனை விடுவித்து, அடியேனுக்கு முற்றும் ஒத்தது ஆகிய தேவரீர் சொரூபத்தில் செம்பொருளே, அடியேனை அடக்கிக் கொள்வீராக.

# வீடுகள் தோறும் ஒலிக்கிறது

மில்க்வைற் தொழிலகம்
தனது பலவித உற்பத்திப் பொருள்கள்
காரணமாக எல்லா வீடுகளிலும்
பழக்கமானது.

உடம்பில் அழுக்கைப் போக்கவும்,
உடைகளில் அழுக்கைப் போக்கவும்
விதம்விதமான
**சவர்க்கார வகைகளையும்,**

வீட்டில் கொசு, நுளம்பைப் போக்க
**நீம் தூபம்,**

எண்ணெய் முழுக்குக்கு
**ஒலிவ் ஸ்நானப் பவுடர்,**

தோட்டத்தை வளம்படுத்த
**நீமியா உரம்**

இவை மில்க்வைற் தயாரிப்புக்கள்

— தங்கள் சேவை நாட்டுக்குத் தேவை —

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23233


சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.